**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 7/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 4 |
| Name | : | மாரியப்பன், வயது 39 |
| Father Name/Husband Name | : | காளிமுத்து |
| Village | : | தோணுகால் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | பஸ்நிறுவனத்தில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of July 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தோணுகாலில் வசித்து எஸ்.எஸ்.ஆர்.பி.எஸ் பஸ்நிறுவனத்தில் மேலாளராக வேலை செய்கிறேன். எதிரியை எனக்கு தெரியும் எங்கள் கம்பெனி எஸ் எஸ் ஆர் பி எஸ் டிரைவராக 3 ஆண்டுகளாக வேலை பார்த்தார்.
2. வழக்கில் இறந்த நபரை எனக்கு தெரியாது. கடந்த 22.08.2022 ஆம் தேதி மாலை 06.00 மணிக்கு மேல் குருவிகுளம் – கோவில்பட்டி செல்லும் எங்கள் நிறுவன பேருந்ததான TN 69 AQ 6888, எதிரி டிரைவராக இருந்த போது, அந்த பேருந்து காலங்கரைபட்டி அருகே சென்ற போது பேருந்தில் பயணம் செய்த சண்முகராஜ் என்பவர் பேருந்தில் இருந்து கீழே விழுந்து தலையில் காயம்பட்டதாக எதிரி என்னிடம் போன் மூலம் தகவல் சொன்னார்.
3. பின்னர் இரண்டு மூன்று நாட்கள் கழித்து அந்த நபர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. விபத்து சமயத்தில் இறந்த சண்முகராஜ் அதிக மதுபோதையில் இருந்ததாக தான் பேருந்தின் டிரைவர், பயணிகள் மற்றும் நடத்துனர் சொன்னார்கள் என்றால் சரிதான். உங்களை போலிசார் விசாரணை செய்யும் போது சண்முகராஜ் மதுபோதையில் கீழே விழுந்ததாக கேள்விபட்டதாக தான் சொன்னீர்கள் என்றால் சரிதான்.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.